
உதிர்த்த முத்துக்கள்......

பகவான் ஷீர்டி சாயி பாபா,

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்கள்

திருவாய் மலர்ந்தருளிய பொன் மொழிகள்.

மொழிபெயர்ப்பு:- இ.சிவராசா.

இலவச வெளியீடு

# என் உரை

*Golden words of Sri Sai Baba – (Shridi –* ஷீர்டி சாயிபாபா) என்ற தலைப்பில் திரு. இராமலிங்கசுவாமிகளால் 1983ல் பிரசுரமாகிய ஒரு புத்தகமும், ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் பொன் மொழிகள் அடங்கிய *Avathara Vani* எனும் நூலும் இரு சாயி அன்பர்களிடமிருந்து பெறப்பட்டு அவற்றைப் படித்து ரசிக்கும் பேறுபெற்றேன். அப் பொன்மொழிகளை ருசித்துப்பருகிய நாள் தொடக்கம் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனும் முதுமொழிக்கு அமைவாக அவற்றுள் பொதிந்துள்ள ஆன்மீகத் தத்துவங்களை பலரும் அறியவேண்டும் என்ற அவா உந்திக் கொண்டிருந்தது. பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளில் ஷீர்டிசாயிபாபா செப்பியவற்றை இறையியல், உலகியல், மனம் சார்ந்தவை என்ற தலைப்புகளின் கீழ் முன்வைப்பது இலகுவில் புரிந்துகொள்வதற்கேதுவாக அமையுமெனத் தோன்றியது. பகவானின் ஆசியைவேண்டி எனதுமுயற்சியில் அடியெடுத்து வைத்தேன். ஊன்றுகோல்போல் பின்னாலிருந்து அவரே நிறைவேற்றித் தந்துள்ளார்.

மனித இதயங்களில் ஓர் உயர்மனமாற்றத்தை ஏற்படுத்துவதும் அவதார புருஷர்களின் நோக்கங்களில் ஒன்றாகும். இறைவனிடம் நாம்செலுத்தும் பக்தியானது அந்த இறைத்தன்மைக்கு இசைந்தவற்றை ஏற்கவும், ஒவ்வாதவற்றை ஒதுக்கவும் தேவையான விவேகத்தைத்தருகின்றது. ஆன்மீகத்துடன் இணைந்தவாழ்க்கைமுறை நம்மை அறிவுமட்டும் வளர்ந்த அரக்கனாகவோ, உடல்மட்டும் வளர்ந்த மிருகமாகவோ ஆகிவிடாமல் ஆளுமையின் சிறப்பம்சங்களான உடல், மனம், அறிவு, உணர்வு, ஆன்மா ஆகியன வளர்ச்சிபெற்ற பூரணமனிதத் தன்மையுள்ளவனாக உயர்த்துகின்றது. நமக்கு விவேகத்தைக்கொடுத்து நாமும் அவரும் ஒன்றே, நாம் அனைவரும் கடவுளே என்று உணரவைத்து நாம் நம்முடைய உண்மையான இயல்பை அறிந்தால்தான் இந்த உலகபந்தங்களிலிருந்து விடுபடமுடியுமென உணரவைத்து நம்மை உயர்மனமாற்றம் ஆகிய பாதையில் வழிநடாத்திச் செல்லுமாறு பிரார்த்தித்துக்கொள்வோமாக.

கருணைக்கடலாகிய பாபாவின் அருட்பிரசாதத்திற்கு கைமாறாக இம்மொழி பெயர்ப்பினை அவருடைய கமலப்பாதங்களில் என்நன்றி கலந்த நமஸ்காரங்களுடன் சமர்ப்பிக்கின்றேன்.

தவறேதுமிருப்பின் சுட்டிக்காட்டுவது திருந்திக்கொள்வதற்கு உதவியாய் அமையும்.

***இ.சிவராசா***



## இறைவனின் இயல்புகள்.

**1.** எம்மைச்சுற்றிலும் காணப்படும் அனைத்து பூச்சி, புழு, பறவை, மிருகம், மற்றும் கண்ணுக்குத்தெரிவன, புலப்பாடதன, அசைவன, அசைவற்றன மற்றும் யாவற்றுள்ளும் நானே சூட்சுமமாய் இருக்கின்றேன். அனைத்தும் எனது சொரூபமே.

**2.** உனது நாமத்தையும் சொரூபத்தையும் அகற்றியபின் உன்னுள்ளும் மற்றும்யாவற்றுள்ளும் ஏதோஒன்று சூட்சுமமாக இருப்பதாக உனது விழிப்புணர்வுக்குத் தெரிகின்றதே! அது தான் நான்.

**3.** நான் இறந்த பின்பும் கல்லறையிலுள்ள எனது எலும்புகள் நம்பிக்கையையும் மனஉறுதியையும் அளிக்கும் என்பதை நம்புவாயாக.

**4.** பிறப்பையும் இறப்பையும் பிரித்துப்பார்க்க முடியாது. அது ஆண்டவனின் அனுக்கிரகம். அவரே யாவற்றினுள்ளும் உறைந்திருப்பதனால் உண்மையில் நாம் மாறுவேடம் போடுகின்றோமேயல்லாது யாரும் புதிதாக பிறப்பதில்லை.

**5.** உலகின் படைப்புகள் யாவற்றுக்கும் மூலகர்த்தாவானவரால்கூட பிறப்பு இறப்பு எனும் நியமத்தில் சிறிதளவும் மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது.

**6.** கடவுள் ஒருவரே எல்லாவளங்களையும் கொடுத்தருளுபவராகவும், பாதுகாப்பவராகவும் விளங்குகின்றார். அவரை என்னேரமும் நினைவில் கொண்டிருப்பவனது தேவைகளைப்பூர்த்தி செய்கின்றார். நீயும் உன்னை மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் சரணடைந்தும் உனதுவளங்களை அர்ப்பணித்தும் பிரார்த்தனைசெய். அவர் என்ன செய்கின்றார் என்பது புரியும்.

**7.** பிரம்மன் ஒருவனே உண்மையான நிரந்தரமானவன். இப்பிரபஞ்சமும் மாறும் தன்மையுடையது. நிரந்தரமற்ற இப்பூவுலகத்தில் தந்தையோ, தாயோ, தனயனோ, எவராயினும் எதையும் உரிமை கொண்டாடமுடியாது.

**8.** நான் எதுவித வரையறைகட்கும் அப்பாற்பட்டு பூமி, ஆகாயம், ஒளி, சுவர்க்கம், நாடு, உலகமென எங்கும் வியாபித்திருக்கின்றேன்.

**9.** நன்றியுணர்வு, தளராத நம்பிக்கை, தீவிரபக்தி ஆகிய மூன்றையும் தவிர வேறு எதையும் நான் பக்தர்களிடமிருந்து எதிர்பார்ப்பதில்லை.

**10.** உன் இதயத்தில் வீற்றிருந்து உன்னை ஆட்சிசெலுத்துவது போல் இந்த உலகமெனும் நாடக மேடையில் காட்சிகளை மாற்றியமைப்பதையும் எனதுகட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றேன்.

**11.** யாரிடமும் மந்திரமோ, உபதேசமோ பெறுவதற்கு முயற்சிசெய்யாதே. உனது எண்ணங்களினதும் செயல்களினதும் குறிக்கோள் என்னையே சார்ந்திருப்பதனால் பாரமார்த்தநிலையை அடைவாய் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

**12.** தெய்வீக கதைகளைக் கேட்டு அதன் உட்கருத்தை உணர்வுபூர்வமாக ஆழ்ந்து அனுபவித்து கடவுளை தொடர்ந்து தியானிக்கும்போது அவரே வந்து உன் இதயத்தில் வாசம் செய்வார்.

**13.** நவ(ஒன்பது)பக்தி முறைகளில் ஏதாவது ஒன்றை முறையாக ஒருவன் கடைப்பிடிப்பானேயானால் ஆண்டவன் அவனது வீட்டில் மனமுவந்து தோன்றுவார்.

**14.** எவனொருவன் தனது ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் பற்றுக்களையும், காம,குரோதங்களையும் வென்று இதயபூர்வமாக ஆண்டவனுக்குச்சேவைசெய்யும் நோக்கில் பிச்சா பாத்திரம் ஏந்துகின்றானோ அவன் என்னால் ஆசிர்வதிக்கப்பட்டவனாகின்றான்.

**15.** ஒவ்வொருவரினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கேதுவாக எனது உண்டியல் என்றும் நிறைந்தேயுள்ளது. ஆனால் நான்கொடுப்பதை அவன் ஏற்றுக் கொள்வதற்குத் தகுதியானவனாவென ஆராயவேண்டியுள்ளது.

**16.** சதா எனதுநாமத்தை ஜெபிப்பவனும் இடையறாது என்னை தியானிப்பவனும் நதியானது கடலில் சங்கமமாவதுபோல் என்னுள் இரண்டறக் கலந்து விடுகின்றான்.

**17.** எந்நேரமும் என்னையே தனது நினைவில் சுமந்தும் எனக்குப் படைத்தபின் உணவருந்தும் வழக்கமும் உள்ளவனிடம் நான் என்றும் தஞ்சமடைந்திருக்கின்றேன்.

**18.**வேதங்களைப் படிப்பதாலோ புத்திக் கூர்மையினாலோ அறிவுசார் நூல்களை வாசிப்பதாலோ ஒருவன் தன்னை அறிந்துவிட முடியாது. ஆன்மாவால் குருவாக

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர்க்கே ஆன்மா தனது உண்மை நிலையை வெளிப்படுத்தி அக்குருமூலமாகவே உன்னை நீ அறிந்து கொள்ளமுடியும்.

**19.** நான், நீ எனவேறுபடுத்தும் உணர்வே குருவையும் சிஷ்யனையும் தூர விலகி நிற்கச்செய்கின்றது. இத்திரை நீங்காவிடத்து சிஷ்யன் குருவில் சங்கமமாவது சாத்தியமில்லை.

**20.** குருவே ஹரியாகவும் ஹரனாகவும் பிரம்மாவாகவும் அவதாரம் எடுத்துள்ளார் என்ற மகிமையை உணர்ந்தவன் என்னால் என்றும் ஆசிர்வதிக்கப்பட்டவனாகின்றான்.

**21.** நான் எதை போதுமென்றவரை திருப்திகரமாக அளிக்க முடியுமோ அதைப்பெறுவதில் ஆர்வம்காட்டாது என்னால் வழங்க முடியாதவற்றைத் தரும்படி கேட்கின்றனரே!

**22.** எமது ஆயுட்காலத்தினுள் பரம்பொருளாகிய பிரம்மத்தினைக் காணவோ அல்லது உணர்ந்து கொள்ளவோ எல்லோராலும் முடிவதில்லை.

**23.** உலகம் ஒரு கேலிக்கூத்தானது. எனது பிரஜைகள் எல்லோர்மீதும் நான் ஓரேவித பார்வையைத்தான் என்றும் செலுத்துகின்றேன். இருந்தும் சிலர் கள்வர்களாக மாறிவிடுகின்றனர். யான் என் செய்வேன்! சாவின் விளிம்பில் உள்ளவர்கள்கூட மற்றவர்கட்குத் தீங்கிழைக்க முற்படுகின்றனரே! இது எனக்கு மிகவும் அசௌகரியத்தையும், துன்பத்தையும் தருகின்றது.

**24.** நான் எங்கிருந்து வந்தேனோ அங்கேயே திரும்பச்செல்லும் வரைக்கும் தாங்கொணாத் துயர்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றேன். ஆனாலும் பக்தர்களின் நலன்கருதி இவ்விடர்களை சகித்துக்கொள்கின்றேன்.

**25.** பக்தர்கட்காக எனது நல்வினைப்பயன்களை நல்குவதோடு மட்டுமல்லாது உதவி புரியவும் என்றும் ஆவலுடன் காத்திருக்கின்றேன்.

**26.** நான் மனமுவந்து ஏற்றுக்கொள்ளாதவரை பக்தன் ஒருவன் என்னை ஒருபோதும் அணுகவும் முடியாது.

**27.** எனது அற்புதங்களைப் பாடுகின்றவர்கட்டு என்றும் நிலைத்திருக்கும் ஆனந்தத்தையும் பூரணதிருப்தியையும் அளிப்பேன் என்பது உறுதி.

**28.** பகவானைத்தேடி யாரும் காததூரம் அலையத்தேவையில்லை. பிரேமையும் பக்தியும் நிரம்பிவழியும் பக்தனிடத்திலேயே இறைவனைக்காணமுடியும்.

**29.** எனது இயல்புகளையும் செயற்பாடுகளையும் யாரும் இலகுவில் விபரித்துவிட முடியாது.

**30.** தன்னைத்தான் அறிதல் எனும் பிரம்ம ஞானத்தை அடையும் வழியானது கூரிய வாளின்மேல் நடப்பதற்கு ஒப்பாகும்.

**31.** பிரம்ம ஞானம் வேண்டுமென்று என்னிடம் வந்து கேட்பவர்கள் மிக மிக அரிதாகவேயுள்ளனர்.

**32.** நீ எவ்வளவு தூரத்திலிருந்தாலும் எக்காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் அதைநான் முழுவதுமாக அறிவேன் என்பதை என்றும் நினைவில் கொள்வாயாக.

**33.** தனது பக்தன் ஒருவனுக்கு ஆபத்து நேரும்போது கடவுள் அவனை நோக்கி விரைகின்றார்.

**34.** ஷீர்டியிலிருந்து ஆயிரம் மைல்கட்கப்பாலும் எனது பக்தனொருவனுக்கு இறப்புநேருங்கால் நான்அவனை உடனடியாக என்னிடம் இழுத்து விடுகின்றேன்.

**35.** ஆண்டவனின் அன்புக்குப்பாத்திரமாகியவனுக்கு அவர் விவேகத்தையும் வைராக்கியத்தையும் அளித்து சம்சாரக்கடலைப் பாதுகாப்பாகக் கடக்க துணைபுரிகின்றார்.

**36.** ஆற்றின் மறுபக்கத்திலுள்ள தனதுகுஞ்சுகட்கு ஆமை பாலையோ இதமான வெப்பத்தையோ அளிப்பதில்லை. பதிலாக, தாயின் இடையறாத நினைவே அவற்றுக்குச் சத்துணவாகின்றது. குஞ்சுகளும் தாயின்நினைவுடனேயே உலாவுகின்றன. குரு சிஷ்ய உறவும் இவ்வாறானதே.

**37.** என்னையும் உன்னையும் வேறுபடுத்திக் காட்டும் அந்த மதிற்சுவரை தகர்த்துவிட்டால் நாம் சந்திப்பதற்கானபாதை அகலத்திறந்து விடும்.

**38.** நீ தேவையற்ற விதத்தில் பிறரின் அற்பகுறைகளை பெரிதுபடுத்திப் பழிசுமத்தும்போது என்இதயத்தை ஈட்டியால் துழைப்பதுபோன்ற

வேதனையடைகின்றேன். அதேநேரம், அப்பழியைச் சகித்துக் கொண்டிருப்பவர் எனது அன்புக்கும் ஆதரவுக்குமுரியவராகின்றார்.

**39.** சதா "சாயி சாயி" என ஜெபித்துக் கொண்டிருப்பவனை ஏழுகடலையும் தாண்டி சொர்க்கலோகத்துக்கு அழைத்துச் செல்வேன்.

**40.** நான் உன்னிடத்திலிருந்து விலகிச்சென்று விடுவேனென்று ஒருபோதும் ஏங்காதே.

**41.** எனது விருப்பு வெறுப்புகட்கேற்றவாறு சேவைசெய்யலாம் என்ற எண்ணத்துடன் ஈடுபடுவது சேவையாகாது. மாறாக, "இந்தஉடம்பு என்னுடையது" என்றஎண்ணத்தை விடுத்து இது பிறருக்குச் சேவையாற்றுவதற்கென்றே ஆண்டவனால் அளிக்கப்பட்டது என்ற உணர்வுடன் சேவைசெய்ய வேண்டும்.

**42.** எனது உண்மையான பக்தனது வீட்டில் உணவுக்கோ உடைக்கோ ஒருபோதும் தட்டுப்பாடு நிலவாது.

**43.** என்னை அளவுக்கதிகமாக நேசிப்பவனுக்கு என்றும் காட்சி தருகின்றேன்.

**44.** ஒருநாள் நான் கடுமையானசுகவீனமுற்று இதயத்துடிப்பும் அதிகரித்து வாழ்க்கையே அஸ்தமனமாகிவிடுமோ என்று பயந்திருந்தேன். அக்கணத்தில் "விஷ்ணு சகஸ்ர நாம" என்றநூலை எனதுநெஞ்சுடன் அணைத்துப்பிடித்ததும் அற்புதமான சுகம் கிடைத்தது.

**45.** இங்கு வருபவர்களின் கர்மவினையைக்குறைக்கும் பொருட்டு நான் அவற்றை அரைக்கவேண்டியுள்ளது.

**46.** அரசன், ஆண்டி, நண்பன், விரோதி யாபேரும் எனதுபார்வையில் வேறுபட்டவர்கள் அல்லர்.

**47** முற்பிறப்பில் மானிடராகப்பிறந்து என்னுடன் நட்புறவு கொண்ட அதிஷ்டத்தைப் பெற்றவர்கள் இப்பிறவியில் எனதருகாமையில் அமரும் பாக்கியத்தை அடைந்துள்ளனர்.

**48.** நான் கடவுளுமல்ல, அரசனுமல்ல, கருணைமயமான அந்த ஆண்டவனை இடைவிடாது நினைவில்கொண்டிருக்கும் ஒரு விசுவாசமான ஊழியன்.

**49.** அவனது கஞ்சத்தன்மையை அறிந்திருந்தும் அவனைக்காப்பாற்றும் நோக்கில் பூனைவடிவில் சென்று அவன் வீட்டில் தயிர் சாப்பிட்டபோது என்னை அடித்து விரட்டிவிட்டான்.

**50.** ஆண்டவனின் படைப்பாகிய இந்தப்பூமியின் இயற்கை அழகை ரசிப்பதும் பாராட்டுவதும் நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

**51**. பேரானந்தத்துள் நான் இரண்டறக்கலந்து அனுபவித்த இன்ப உணர்வுகளை என் போன்ற அறிவிலிகளால் எங்ஙனம் விபரிக்க முடியும்.

**52.** உருவமோ அருவமோ அற்ற நான் எனது பக்தனைச் சென்றடைவதற்கு எந்தவித கதவுகளும் தடையாக அமையாது.

# மனத்தின் பண்புகள்

1. இந்த உடம்பை நானென எண்ணுவது மாபெரும் பிரமையாகும். இதில் பற்று வைப்பதுதான் உலகபந்தங்கட்கு வித்திடுகிறது. எனவே தன்னையறியும் ஞானநிலையை எய்தவிரும்புபவன் அவ்வாறான எண்ணத்தையும் பற்றினையும் விலக்கிவிடவேண்டும்.

2. எனது உருவமற்ற இயல்பை தியானிக்கமுடியாவிடத்து இங்கே இராப் பகலாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கும் எனது உருவத்தை உச்சிமுதல் பாதப்பெருவிரல் நுனிவரை தியானியுங்கள்.

3. உனது மனமும் புலன்களனைத்தும் என்றும் பரம்பொருளைப் பிரார்த்திப்பதில் ஆழ்ந்திருக்கட்டும். வேறெதிலும் நாட்டமின்றி மனதை எங்கும் அலையவிடாது என்னை உன்மனத்தில் நிலைநிறுத்தினால் அமைதியும் சாந்தியும் அடைவாய்.

4. மாசற்ற மனதில்தான் உண்மையையும் மாயையையும் பிரித்துப்பார்க்கும் விவேகமும் நிலையற்றவற்றின்மீது ஏற்படும் பற்றினை அறுக்கும் வைராக்கியமும் முளைவிட்டெழுந்து தன்னைத்தானே அறியும்நிலைக்கு உயர்வடையச் செய்கின்றன.

5. விசுவாசத்துடன் பிரார்த்தனை செய்து இடைவிடாது தியானித்து என்னைப் பூரணசரணாகதி அடைபவனுக்கு விடுதலையளிப்பது எனது விஷேட இயல்பாகும்.

6. அஞ்ஞானத்தை அகற்றுவதே ஞானத்தை அடைவதற்கான பாதையாகும்.

7. என்னைத் தியானித்துக்கொண்டிருக்கும்போது உனது எண்ணஅலைகள் ஓரிடத்தில் நிலைத்து தியானிப்பவர், தியானம், தியானிக்கப்படும்பொருள் என்பவற்றுக்கிடையேயான வேறுபாடுகள் மறைந்து தியானிப்பவர் பரப்பிரம்மத்துள் இரண்டறக்கலந்து விடுவார்.

8. அகங்காரத்தை விட்டொழித்து பரம்பொருள்மீது பூரணநம்பிக்கை வைத்து நன்றிசெலுத்துபவன் தனது இன்னல்கள் களையப்பெற்று விடுதலையடைவான்.

9. ஹரியின் பாதங்களில் பூரண சரணாகதியடைந்தவன் வாழ்வியல் துன்பங்களிலிருந்து விடுபட்டு பேரானந்த நிலையை அடைகின்றான்.

**10.** எமது வாழ்நாளில் அந்தப்பரம்பொருளைக் காணவேண்டுமெனில் சில அடிப்படைத் தகைமைகளை வளர்த்துக்கொள்வது அவசியமாகின்றது.

**11.** என்னால் படைக்கப்பட்ட யாவற்றினுள்ளும் சூட்சுமமாய் விளங்கும் அந்தப்பரம்பொருளை ஆசைகள் யாவற்றையும் துறந்து தியானிக்க மனமானது ஒருநிலைப்பட்டு உனது குறிக்கோளை அடைய வழிசெய்கிறது.

**12.** எனது குறிக்கோளாகிய குருவின்மீது பார்வையை செலுத்தி தியானித்துக்கொண்டிருந்தபோது எனது புலன்கள் யாவும் தத்தமது நிலையிலிருந்து மீண்டு என்கண்ணுக்குள் நிலைபெற்றன. அப்போ என் குருவைத்தவிர வேறெந்த உணர்வுமற்ற நிலையில் இருந்தேன்.

**13.** தற்பெருமையையும், அகங்காரத்தையும் இம்மியளவும் அவற்றின் சுவடி ல்லாது நீக்கி உன்இதயக்கமலத்தில் வீற்றிருக்கும் என்னிடத்தில் சரணாகதியடைவாயாக.

**14.** பேராசையின் அறிகுறி ஒருசிறிதளவேனும் மனதில் காணப்படுமிடத்து அவனது ஆன்மீகமுயற்சிகள் யாவும் பயனற்றவையாகிவிடும்.

**15.** தொடர்ச்சியாக தியானப்பயிற்சியில் ஈடுபடும்போது நமது எண்ணங்கள் படிப்படியாக சாந்தமடைகின்றன.

**16.** என்குருவை குறிவைத்துத்தியானிக்கும்போது மனமும், புத்தியும் ஸ்தம்பிதமடைந்துவிடுவதால் நான் பணிவன்போடு அமைதியாக அவரை தஞ்சமடைந்துவிடுகின்றேன்.

**17.** உனது நல்வினை தீவினைக்குரிய பலன்களை நீயே அனுபவித்து முடிக்க வேண்டும். மாறாக, தற்கொலையை தீர்வாக நாடினால் எஞ்சியுள்ள பலன்களை அனுபவித்து முடிப்பதற்கு நீ இன்னும் பற்பல பிறவிகள் எடுத்தேயாகவேண்டும்.

**18.** ஏன் இவ்வாறாக அலைகின்றாய். பூரணநம்பிக்கை வைத்து மனதிற்குகந்த ஒரு இடத்தில் அங்கேயே அமைதியாகஇருந்துவிடு.

**19.** ஒரு துறவியைப்பற்றி அவதூறாக பேசப்படும்போது ஒருகணமேனும் அவ்விடத்தில் நிற்காதே.

**20.** எவனொருவன் நாஸ்திகரினதும் மதப்பற்று அற்றவரினதும் கபடத்தன்மையுடையவரினதும் சகவாசத்தை தவிர்த்துப் பணிவுடனும் தாழ்மையுடனும் இதயபூர்வமாக என்னை வணங்குகின்றானோ அவனுக்கு நிரந்தர எல்லையற்ற ஆனந்தத்தை அளிக்கின்றேன்.

**21.** உலகமே தலைகீழாகத் தோன்றினாலும் அமைதியாக அதே இடத்தில் இருந்தவண்ணம் வெளிப்புறக்காட்சிகள் யாவும் மாறிக்கொண்டிருப்பதனை அவதானித்துக்கொண்டிரு.

**22.** எங்கும் வியாபித்துள்ள பரம்பொருளின் பாதங்களில் எமது பிராணனையும் மனதையும் பூரணமாக அர்ப்பணித்துவிட்டு எமக்கென விதிக்கப்பட்ட கடமைகளை செவ்வனே செய்வோமாக. இதற்கு உறுதியானதும் அசைக்க முடியாததுமான நம்பிக்கை அவசியம்.

**23.** என்மீதே தனது கவனத்தை செலுத்திக்கொண்டிருப்பவனை எவ்வித தீயசக்திகளும் அணுகமாட்டா. ஆனால், என்னை மறந்திருப்பவனை மாயையானது என்றும் அடித்துத்துன்புறுத்திய வண்ணமிருக்கும்.

**24.** ஆன்மா கண்ணுக்குப் புலப்படாததாகவும், சூட்சுமமாகவும் இருப்பதால் எவரும் தமது சொந்தமுயற்சியால் அதை அறிவதை நினைத்தும் பார்க்கமுடியாது. இங்கே, ஆத்மாவுக்கு விழிப்புணர்வு பெற்ற ஒரு குருவின் துணை அத்தியாவசியமாகின்றது.

## உலகியல் சார்ந்தவை.

**1.** எமது ஒவ்வொருசெயலிலும் தற்பெருமையையும் அகங்காரத்தையும் முழுமையாக நீக்கிவிடுவோமேயானல் ஆன்மீகமுயற்சிகள் அதிவிரைவில் நற்பலன்களை அளிக்கும்.

**2.** ஆசைகளைத் துறக்காதவனும், தனதுசெயல்கட்கான பலனை எதிர்பார்ப்பவனும், சொத்துக்களைப் பெருக்குவதிலேயே நாட்டம் கொண்டிருப்பவனும் எத்துணை அறிவாளியாகஇருப்பினும் அவனது அறிவு பயனற்றது. அவனால் தன்னையறிவதும் இயலாத காரியம்.

**3.** கபடத்தன்மையையும் அதர்ம செயல்களில் நாட்டத்தையும் பூரணமாக விலக்கி மன அமைதியைப்பெறாது எத்தகைய அறிவின் மூலமாகவும் ஞானத்தை அடைய இயலாது.

**4.** சொத்துக்களும் மற்றும் வாழ்க்கைவசதிகளும் கணப்பொழுதில் மாறுந்தன்மையுடையவை. நமது உடம்பும் அங்ஙனமே இறப்புக்குப் பின் சிதைந்துவிடும்.

**5.** பெண்ணாசையும் சொத்துக்களின்மீது ஏற்படும் பற்றுமே ஆன்மீக முன்னேற்றத்திற்குத் தடை விதிப்பனவாகும்.

**6.** உலகியல்சம்பந்தமான உனது வல்லமைகளைப்புறந்தள்ளி "சாயி சாயி" என சதா ஜெபித்துக்கொண்டேயிருப்பாயானால் தடைகள் களையப் பெற்று விரைவில் ஆன்மீக விடுதலையடையலாம்.

7. மக்கள் ஆண்டவனின் கிருபையில் பூரணநம்பிக்கையை வளர்ப்பதில் முயற்சிஎடுக்காது உணவு, உடை பற்றிய கவலைகளில் தமதுநேரத்தை விரயம் செய்யக்கூடாது.

**8.** நாம் எப்போதும் நல்லவற்றையே எண்ணி நன்மை பயப்பனவற்றையே செய்யப் பழகவேண்டும். எது நடக்கவிருக்கின்றதோ அது விதிப்படி நடந்தே தீரும்.

**9.** சொத்துக்கள், சுகங்கள் பெருகப் பெருக அடக்கமாயிருக்கப் பழகிக் கொள்வதுடன் எப்போதும் "நான் யார்?" என்ற ஆத்ம விசாரணையில் ஆழ்ந்திருக்க வேண்டும்.

10. சொத்து, சந்ததி, செல்வச்செழிப்பு ஆகியவற்றின் சந்தோஷத்தில் முழ்கிக் கிடக்கும் ஒருவன் அப்பற்றுக்களை அறுக்காதவரை பிரம்மத்தைக் காண்பதென்பது எங்ஙனம் சாத்தியமாகும்.

11. புலனுணர்ச்சிகளின்வழியே அலைபவனுக்கும் அகங்காரம் கொண்டிருப்பவனுக்கும் குருவின் உபதேசங்கள் எவ்விதத்திலும் பயனளிக்காது விளலுக்கிறைத்த நீர்போல் ஆகிவிடும்.

12. நன்மையோ தீமையோ "நான் செய்கின்றேன்" என்ற உணர்வு இல்லாது செய்ய வேண்டும்.

13. பேராசையும் பிரம்மமும் எதிரெதிர்த்துருவங்கள் போன்று ஒன்றுக் கொன்று நேர் மாறானவையே.

14. தனக்கென விதிக்கப்பட்ட கடமைகளை திருப்திகரமாகவும் பலனில் பற்று வைக்காமலும் செவ்வனே நிறைவேற்றி மனதைத் தூய்மைப்படுத்தாதவரை தன்னைத்தானே அறிவது இயலாததொன்றாகும்.

15. ஆசைகள் உனது கட்டுப்பாட்டில் இருக்கவேண்டுமேயொழிய நீ அவற்றிற்குக் கட்டுப்பட்டவனாக இருக்கக் கூடாது.

16. பேராசையால் பீடிக்கப்பட்டவன் எப்போதும் உறுதியற்றவனாகவும் எதிலும் திருப்தியற்றும் அமைதியின்றியும் காணப்படுவான்.

17. எமது புலன்கள் அவற்றின் கடமைகளை நிறைவேற்றுவதற்கேதுவாக இயற்கையாகவே வெளிநோக்கிய தன்மையுடன் படைக்கப்பட்டிருப்பதால் மனிதனும் புலன்வழியேசென்று எப்போதும் புற உலகில் சஞ்சரிக்கின்றான். தன்னையறிந்து நிரந்தர மோட்சத்தையடைய விரும்புபவன் என்றும் உள்நோக்கிய பார்வையுடையவனாக இருப்பான்.

18. உன்னை தனது அடிமையாக்க எத்தனிக்கும் காம, குரோத, மோக, லோப,மத,மாச்சர்யமெனும் ஆறு பகைவர்களையும் உனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டால் விருப்புவெறுப்பு என்பது சிறிதளவும் உருவாகமாட்டாது.

19. போதுமென்ற உணர்வுடன் என்றும் சந்தோஷமாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

20. ஒவ்வொரு புலன்களும் தத்தமக்கென விதிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் எமது தலையீடு சிறிதளவும் இருக்கக்கூடாது.

21. யோகா, தியானம், தவம், அறிவு ஆகியன கடவுளை அறிவதற்கான வழிமுறைகளில் சில. இவற்றில் ஏதாவது ஒன்றைத்தெரிவுசெய்து அத்துறையில் சித்தியெய்யாதவனின் பிறப்பும் வீணே.

22. உடம்பு உள்ளவரை இன்ப துன்பங்கள் இருக்கவே செய்யும். உடம்பினதும் மனத்தினதும் செயற்பாடுகளே மறுபிறப்பிற்கு வித்திடுகின்றன.

23. பிறப்பு இறப்பெனும் சக்கரத்திலிருந்து விடுபடவிரும்புபவன் மன அமைதியுடனும் சாந்தியுடனும் தார்மீகநெறிக்கமைய வாழவேண்டும்.

24. போட்டி மனப்பான்மையையும் அற்ப விடயங்களுக்காக அடம் பிடிப்பதையும் தவிர்த்துக்கொள்பவனை ஆண்டவன் என்றும் பக்கத்துணையாயிருந்து பாதுகாக்கின்றார்.

25. எல்லாமனிதர்களும், பிறபடைப்புகளும் ஊழ்வினைப்பயன் காரணமாகவே தோற்றத்திலும் மற்றும் குணாதிசயங்களிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

26. எமது ஊழ்வினைப்பயனை அனுபவித்து முடிப்பதே பிறப்பு இறப்பெனும் வாழ்க்கைச் சக்கரத்திலிருந்து விடுபடுவதற்கான ஒரேயொரு உண்மையான பரிகாரமாகும்.

27. நாம் விதைத்த வினைகளின் பயனை அனுபவித்து முடிக்காது வாழ்க்கை மேல் சினம்கொள்வதன் மூலம் உடலைத்துறந்துவிட முடியாது.

28. சுதந்திரமாகவும் தாராள மனப்பாங்குடனும் இரு. ஆனால் ஊதாரித்தனமாக செலவு செய்யாதே.

29. உன்னைப்பற்றி யாராவது நூறுவித குறைகளைக் கூறினாலும் பதிலாக கசப்பானவார்த்தைகளைக்கொட்டி வீணேவெறுப்பைச் சம்பாதித்துக்கொள்ளாதே.

30. அதிகம் பேசுபவனும் தன்புகழைப் பாடுபவனும் அவனது சிஷ்யர்களின் இதயத்தில் இடம்பிடிக்கவோ அவர்களை மனமாற்றம் செய்யவோ முடியாது.

**31.** உண்மையைத்தேடும் ஒரு சாதகனாக இருந்து பிரேமையுடனான பக்தியை உருவாக்கி வளர்க்க ஆவல்கொண்டால் நிரந்தர மனஅமைதி அடையப்பெறுவாய்.

**32.** உண்மையான சாதகன் பற்றுக்கள் அற்றவனாக இருப்பதோடு எல்லோரையும் சமமாகநோக்கும் இயல்புடையவனாகவும் இருப்பான்.

**33.** சொத்துக்களுக்கு மதிப்பளித்து அவற்றின்பின் அலையாது எனதருகில் அமைதியாக இரு. மீதி உள்ளவற்றை நான் கவனித்துக்கொள்கின்றேன்.

**34.** ஏழைகட்காகவும் அனுதாபத்துக்குரியவர்களுக்காகவும் என்றும் இரக்கப்படுவாயாக.

**35.** நம்பிக்கையும், பொறுமையும் ஒருவரை ஒருவர் உணர்வுபூர்வமாக நேசிக்கும் இரட்டைச் சகோதரிகள் போன்றவை.

**36.** உலகியல் கௌரவத்திற்காக ஏங்குவதைவிட ஆண்டவனின் திருச்சபையில் அவனது அருளையும், ஆசியையும் பெறுவது பன்மடங்கு மேலானதாகும்.

**37.** சந்தோசமோ, கவலையோ மனதில் முளைவிடும்போதே கிள்ளியெறிந்துவிடு. அவை வெறும் மாயத்தோற்றங்களே.

**38.** ஆன்மாவின் இயல்பினை கற்றுணர்ந்தவர்கள் இறப்பினைக் கண்டு என்றும் வருந்துவதில்லை. அறியாமையினால் பீடிக்கப்பட்டோரே ஆறாத்துயரடைகின்றனர்.

**39.** நாம் பிறந்தபோதே சுமந்துவந்த கர்மவினைப்பயனே நமது சுகதுக்கங்களுக்கு மூலகாரணமாகும். எனவே எதுவரினும் சகித்துக் கொள்ளப் பழகவேண்டும்.

**40.** சத்தியத்தின் வழிநின்று பிரம்மச்சாரியத்தைக் கடைப்பிடித்து தவம், தியானம் என்பவற்றில் ஈடுபடாதவன் கடவுளின் தன்மையை ஒருபோதும் உணர இயலாது.

**41.** சந்நியாசி வேடம்பூண்டு காட்டுக்குப் போவதன்மூலம் வாழ்வியல் துன்பங்களிலிருந்து விடுபட முடியாது.

**42.** பிறப்போ இறப்போ, இலாபமோ, நட்டமோ, யாவும் ஆண்டவனின் கையிலேயே. இருந்தும் மக்கள் எவ்வளவு மூடத்தனமாக ஆண்டவனை மறந்து இறுதிநாள்வரை காலத்தை வீணே கழித்துவிட்டுப்பின் இறப்பு நெருங்கும்போது துன்பப்படுகின்றனர்.

**43.** ஆண்டவன் படைப்பில் எந்த ஜந்துவானாலும் உன்னைத் தேடிவரும் போது அன்புடன் வரவேற்று உபசரிக்க வேண்டும். மாறாக, திட்டி விரட்டிவிடக் கூடாது.

**44.** பசியென்று வருபவனுக்கு உணவளிப்பவன் உண்மையில் எனக்கே அமுதூட்டுகின்றான். இது தொன்றுதொட்டு நிலைநிறுத்தப்பட்ட உண்மையென்பதை நினைவில்கொள்.

**45.** ஏதோ ஒரு உறவுமுறையோ அல்லது பழைய தொடர்போ இல்லாது எந்தவொரு சம்பவமோ, அல்லது சந்திப்போ, அன்றி ஒருஇடத்தைச் சென்றடைவதோ நடப்பதில்லை.

**46.** உனது துன்பங்கள்யாவும் ஒரு முடிவுக்கு வந்தேயாகவேண்டும். ஏங்குவதை விடுத்து அமைதியாயிரு. பாரிய மனவிரக்திக்குட்பட்டவனும் இந்த மசூதியினுள் கால் பதித்தகணமே ஆனந்தமடைவதற்கான பாதையில் காலடி வைத்தவனாகின்றான்.

**47.** ஒரு குருவின் அருளின்றி பல நூல்களையும் வாசித்துப்பெறும் அறிவானது தன்னைத் தானேயறிவதற்கு உதவமாட்டா.

**48.** எத்தகைய இடர்வரினும் உறுதியான நம்பிக்கையுடன் குருவை இறுகப்பற்றி அவரில் சங்கமமாகிவிடு.

**49.** வாழ்க்கையில் ஆத்மார்த்தத்தின் உச்சியை எட்டியவன் நிரந்தரமான பேரானந்தநிலையை அடைகின்றான். ஏனையோர் இறுதிமூச்சுவரை வாழாவிருந்து மடிகின்றனர்.

**50.** நன்மை பயப்பன, சந்தோஷமளிப்பன என இரண்டும் தம்மை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டும்போது புத்திசாலியானவன் என்றும் நன்மை பயப்பனவற்றையே விரும்பி ஏற்றுக்கொள்கின்றான். பேராசையால் பீடிக்கப்பட்டவன் சந்தோஷம் அளிப்பனவற்றைத் தேர்ந்தெடுத்து தன்னையும்

அறிந்து கொள்ளமுடியாமல், பரப்பிரம்மத்தையும் அடையமுடியாது அல்லலுறுகின்றான்.

51. இத்துவாரகமாயியில் காலடி வைப்பவன் விரைவில் தனது துன்பங்கள், வேதனைகள் நீங்கி நலமும் ஆனந்தமும் அடையப்பெறுகின்றான்.

52. அவரவர் பிராப்தத்துக்கேற்ப ஒருவனுக்கு பஞ்சாமிர்தமும் இன்னொருவனுக்கு பழைய ரொட்டித் துண்டும் வேறு சிலருக்கு கஞ்சியும் கிடைக்கின்றது. கஞ்சியைப் பெற்றவன் பஞ்சாமிர்தத்துக்காக ஏங்கும் அதே நேரம் பஞ்சாமிர்தம் பெற்றவன் தனது வாழ்க்கையில் ஒருவித குறையுமில்லையென்று சந்தோஷமடைகின்றான். ஆனால் மூவரும் சாப்பிட்டதன் விளைவு தத்தமது பசியை தற்காலிகமாக தணித்துக்கொண்டது மாத்திரமேயாகும்.

53. விருந்துபசாரம், விழாக்கொண்டாட்டம், தலயாத்திரை, விடுமுறைச்சுற்றுலா போன்றவற்றிற்காக ஒருபோதும் பிறரிடம் கடமைப்படாதே.

54. காம இச்சையானது ஒருவனது மனநிலை தளராமை, வைராக்கியம் என்பவற்றை பலவீனமடையச்செய்து தடுமாற்றத்தையும் தருகின்றது. இது கற்றறிந்தவர்க்கும் பொருந்தும்.

55. பொன்னான நேரத்தை வீணே விரயமாக்காது சிறு சிறு வேலைகளைச் செய்யலாம். இறைநாமத்தை ஜெபிக்கலாம். அல்லது நன்நூல்களை வாசிக்கலாம்.

56. உனது மனம் இன்னும் துய்மையடையாததாகவும் விருப்பு வெறுப்புக்கள் மீது கட்டுப்பாடற்றும் காணப்படுவதால்தான் உன்னால் இனிமையாகவும், மிருதுவாகவும் பேசமுடியாதுள்ளது. எனவே, தினமும் விஷ்ணு சகஷ்ர நாமத்தை ஒரு முறையாவது பாராயணம் செய்.

57. சோம்பேறித் தனத்தால் உந்தப்பட்டு குருவைச் சோதிப்பதற்காகவோ அல்லது அவர் அளிக்கும் விடையில் பிழைகாணும் நோக்குடனோ கேள்விகள் கேட்பது தகாதசெயலாகும். கேள்விகள் எப்போதும் ஆன்மீக முன்னேற்றத்தையும் மோட்சத்தையும் தரவல்ல பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கும் தரம்மிக்கவையாக அமையவேண்டும்.

**58.** பலவிதமான தீன் பண்டங்கட்கும் ஆசைப்படாது உடம்புக்கு இசைவான உணவை அளவுடன் உட்கொள்வது நன்மை பயக்கும். தூங்குவதிலேயே காலத்தைக்கழிக்காது படித்தவற்றை மீண்டும் தியானிப்பதும் இறைவனை நினைவில் கொள்வதும் சாலச்சிறந்தது.

**59.** காமஇச்சையினால் தூண்டப்படும் ஒருவன் எச்சரிக்கையாகவும் பகுத்தறிவுடனும் தன் மனதினை ஊசலாடவிடாது நிலையாக வைத்திருக்க வேண்டும்.

**60.** எத்தனையோ பிறவிகளில் செய்த நல்வினைப்பயன் காரணமாக மானிடனாகப்பிறந்து உனது உறவினர்களின் சிறுபிழைகளையெல்லாம் பெரிதுபடுத்தி அவர்களை தூஷிப்பதில் சந்தோஷமடைவது பிறரின் மலத்தையும் சாணியையும் ஆசையுடன் ருசித்துச்சாப்பிடும் பன்றியின் செயலுக்கு ஒப்பானது. உன்போன்றவர்கள் ஷீர்டியிலிருந்து எதுவித உதவியையும் எதிர்பார்க்க முடியாது.


**61.** ஒருவனது விருப்பத்திற்கு மாறாக சந்தாப்பணமோ, நன்கொடையோ பெற்றுக்கொள்வதை ஆண்டவன் ஒருபோதும் அனுமதிப்பதில்லை. சிறு தொகையானலும் மனப்பூர்வமாக அன்புடனும் பக்தியுடனும் அளிப்பதை பெற்றுக் கொள்வதில் தவறில்லை.

**62.** உனக்கு யாரும் தீங்கிழைப்பின் அதற்குப்பதிலாக அவர்களைப் பழிவாங்கும் எண்ணம் கொள்ளாதே.

**63.** ஒருவனது தாகத்தைத் தணிப்பவனும், பசித்திருப்பவனுக்கு உணவு கொடுப்பவனும், மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள உடைகொடுத்து உதவுபவனும், தனதுவீட்டில் ஒருபகுதியை யாத்திரிகர்கள் இளைப்பாறுவதற்காக ஒதுக்குபவனும் என்றும் ஆண்டவனின் அன்புக்குப் பாத்திரமாகின்றான்.

அனந்தகோடி பிரம்மாண்டநாயக ராஜாதிராஜ
யோகிராஜ பரப்பிரம்ம ஸ்ரீ சச்சிதானந்த
சற்குரு சாயிநாத் மகாராஜ் கீ ஜெய்.

ஜெய் சாய்ராம். ஓம் சாந்தி.. சாந்தி... சாந்தி....



## பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவின் பொன் மொழிகள்...

**1.** நான் உங்கள் ஒவ்வொருவரினதும் ஊழியன். குறிப்பிட்ட ஒருபெயர் எனக்கு இல்லை. எல்லாப்பெயரும் எனக்குரியதாதலால் எப்படி அழைத்தாலும் வருவேன். நீ புறக்கணித்தாலும் உன்னைப் பின் தொடர்வேன். படைத்தவனின் கருணையினால்தான் நாம் அனைவரும் வாழ்ந்துகொண்டிருப்பதால் எனது பார்வையில் யாரும் நாஸ்திகனல்ல. சூரியன் இல்லையென்று பல தடவைகள் கூறிவிட்டால் அது இல்லாமல் போய்விடுமா?

**2.** நான் சங்கு, சக்கரம், கதாயுதம் என்பவற்றுடன் தோன்றியிருந்தால் நீங்கள் ஓடி ஒளிந்திருப்பீர்கள் அல்லது நூதனசாலையில் என்னை ஒரு காட்சிப்பொருளாக்கியிருப்பீர்கள். உங்களைப் போலவே ஒருவனாக இருந்தால் என்னை ஏறெடுத்தும் பார்க்கமாட்டீர்கள். மானிட உருவில் வந்தாலும் என்னை ப்புரிய வைப்பதற்காகவே அவ்வப்போது சிலஅற்புதங்களை நிகழ்த்துகின்றேன்.

**3.** எனது சக்தியை அளவிடமுற்பட்டால் உனக்குத்தோல்விதான் எஞ்சும். பதிலாக, உன்னைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டால் என்னை அறியும் முறையையாவது தெரிந்துகொள்வாய். நான் எதையும் படிப்பதுமில்லை, தவம், தியானத்தில் ஈடுபடுவதுமில்லை. ஒரு யோகியும் அல்ல, சித்தனும் அல்ல. எல்லாசாதகர்களையும் நல்வழிப்படுத்தி ஆசிர்வதிக்கவே வந்துள்ளேன்.

**4.** நான் கேளிக்கைகளையோ பிரயாணங்களையோ நாடுபவனல்ல. மன அமைதியை வேண்டுபவர்கட்கு அதைவிரைந்து அளிக்கின்றேன். வாழ்க்கையில் உற்சாகமிழந்தவர்களை ஊக்கமடையச்செய்கின்றேன். நம்பிக்கையிழந்தவர்கட்கு அதை திரும்பப்பெறச் செய்கின்றேன். எனது அவதாரநோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு எங்கும் ஓடிக் கொண்டேயிருக்கின்றேன்.

**5.** சீனியிலிருந்து இனிப்பையும் சூரியனிலிருந்து ஒளியையும் பிரிக்கமுடியாதது போல் ஒருபொருளின் இயல்பான தன்மையை அதிலிருந்து பிரித்துவிட முடியாது. புருஷ, பிரகிருதி எனும் இரண்டுஇயல்புகளைக் கொண்ட பகவானிடமிருந்தும் பிரகிருதியைப் பிரிக்க முடியாது. கரும்பில் இனிப்புப்போல் அவனில் சங்கமமாகிவிட்ட பிரகிருதியை அனுபவத்தின்மூலம் தான் உணரமுடியும்.

**6.** சத்தியம், பிரேமை என்பவற்றின் மூலமாக மானிடர்களிடத்து ஆன்மீகச் சீர்திருத்தங்களை ஏற்படுத்தி தர்ம, பிரம்ம மார்க்கங்களை காண்பிப்பதற்கு

வந்துள்ளேன். என்னை நோக்கி ஒரு அடி வைக்கும் போது நான் உன்னை நோக்கி மூன்று அடி வைக்கின்றேன். தாங்கொணாத் துயரச் சுமையுடன் என்னை நாடுபவனுக்குத்தான் என்னிடமுள்ளதை வழங்க முடியுமென்பதால் அப்படியானவர்களின் வருகையால் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

**7.** உங்களைப் பாவப்பட்டவர்கள் என அழைப்பது பாவத்தைவிடக் கீழ்மையானது. நீங்கள் ஆனந்தமயமானவர்கள். எல்லாப் படைப்பினுள்ளும் சூட்சுமமாக விளங்கும் அந்த இறைவன் உங்கள்இதயத்தில் வீற்றிருக்கையில் நீங்கள் எங்ஙனம் பாவப்பட்டவர்களாவீர்கள்.

**8.** உங்களது பலவீனங்களையும் பயத்தையும் விரட்டி உத்வேகத்தையும், ஆனந்தத்தையும் அளிப்பதே எனதுகுறிக்கோள். பாவம் செய்தவர்கள் என்று உங்களையே நீங்கள் சபித்துக்கொள்ளாதீர்கள். தவறு என்பதைப் பாவமெனப்பிழையாக அர்த்தம் கொள்கின்றனர். உங்கள் தவறுகட்காக வருத்தப்பட்டு மீண்டும் அவற்றைச் செய்யமாட்டேன் என விசுவாசத்துடன் உறுதிபூணும்போது அவை என்னால் மன்னிக்கப்பட்டுவிடும். அறியாமையில் மூழ்கி பழக்கதோஷம் காரணமாகச் செய்யத்தூண்டும் தவறுகளை வெற்றி கொள்வதற்கான மன வலிமையைத் தரும்படி பிரார்த்திப்போமாக.

**9.** ஒவ்வொருவரும் “நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? நான் எங்கு போய்க் கொண்டிருக்கின்றேன்? நான் இன்னும் எவ்வளவு காலம் உயிர் வாழ்வேன்? ” எனும் அடிப்படைக் கேள்விகட்கு விடை தேடிக்கொண்டேயிருக்க வேண்டும். இவற்றிற்கான விடையை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் எனும் நான்குவேதங்களிலும் காணமுடியும்.

**10.** உனது இதயமாகிய தோட்டத்தை, மனமெனும் ஏரில் முக்குணங்களாகிய காளைகளைப் பூட்டி, பகுத்தறிவெனும் பிரம்பின் உதவியோடு உழுது, முயற்சியெனும் பசளையிட்டுப் பண்படுத்தி, அன்பெனும் விதைகளை நாட்டி, பக்தியெனும் மழையில் வளரவிடு. அத்தோட்டத்தில் உணர்ச்சிவசப்படுதல் எனும் களையை வளரவிடாது எச்சரிக்கையுடன் இருந்தால் பரமானந்தத்தை நிச்சயம் அறுவடைசெய்யமுடியும்.

**11.** தனுது ருசியை மற்றவர்கள் சுவைப்பதற்காக கரும்பானது தன்னை வெட்டிப் பதப்படுத்திப் பிழிந்து சாறெடுத்து காய்ச்சுவதனை வரவேற்கிறது. அதுபோல் சந்தோஷமானது பலகஷ்டங்களின் மத்தியில் இருப்பதால் இடர்களை வரவேற்கப்பழகவேண்டும். நகை செய்ய விரும்புபவன் அதற்கான

தங்கத்தை பொற்கொல்லனிடம் அளித்துவிட்டு அதை அவன் எப்படியெல்லாம் சூடாக்கி, அடித்து, வளைத்து, நெழித்து இன்னும் என்னவெல்லாம் செய்வான் என்று கவலைப்படுவதேயில்லை. உன்னையும் நல்லஆபரணமாக மாற்றுவதற்கு ஆண்டவன் புடம்பண்ணுவதையிட்டு ஏன் கவலைப்படுகின்றாய்?

**12.** நிலத்தைப்பண்படுத்திப் பசளையிட்டு நாட்டிய விதை முளைத்து பயன் தராவிடில் ஒரு விவசாயி எவ்வளவு கவலையடைவான்? எனக்கும், உங்கள் மனதில் விதைக்கும் சத்தியமெனும் விதை செழித்துவளர்ந்து பயன் தராத போது கவலையை அளிக்கின்றது. எனது ஆதாரமும், ஆகாரமுமான ஆனந்தத்தை நீங்கள் அறுவடைசெய்து பருகவேண்டும். அதைவிடப் பெரிய சேவை எதனையும் நான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை.

**13.** பலவீனமென்பது பாவமானது. வலிமை தூய்மையானது. உடல், மனம் மற்றும் ஆன்மீக ரீதியான பலம் எமக்கு இன்றியமையாதது. இவற்றின் மேலாக, நமக்குள் உறையும் பரமாத்மாவின் மீதுள்ள நம்பிக்கை மிகவும் வலிமை வாய்ந்தது. ஏனெனில், நமக்குத்தேவையான சக்தியை அவனிடமிருந்து எப்போதும் பெற்றுக்கொள்ள முடியும். மனச்சோர்வு ஒருவனது வீழ்ச்சிக்கு முக்கிய காரணியாதலால் என்றும் சந்தோஷமாக இருக்கப்பழகவேண்டும்.

**14.** ஆன்மீக சாதனைகளைப் பிற்போடாது இன்றே தொடங்கிவிடு. சிறுவயதிலிருந்தே எழுத்துகளைக் கற்றவனால்தான் பின்னர் விஞ்ஞானத்திலும், கலைகளிலும் சிறந்து விளங்க முடிகின்றது. ஆன்மீக அறிவில் குழந்தைகளாயிருக்கும் நாமும் இன்றிலிருந்தே அதை வளர்க்க வேண்டும். முதுமையிலோ, மரணப்படுக்கையிலோ ஆன்மீகம் எட்டாக்கனியாகிவிடும். உனது ஆயுட்காலம் ஒவ்வொரு கணமும் சுருங்கிக் கொண்டேயிருக்கின்றது. கடந்த நிமிடங்கள் இனி உன்னுடையவையாகா. வரப்போகும் நிமிடங்களையும் உன்னால் பிரயோசனப்படுத்தலாமென நிச்சயமாகக் கூறமுடியது. எனவே. இக்கணத்திலிருந்தே பரமானந்தத்தையடையும் நோக்கில் உனது சகல முயற்சிகளையும் ஒன்றிணைத்துச் செயல்படுவாயாக.

**15.** உனது பாதுகாவலனாகவும், வழிகாட்டியாகவும் தவறான திசையில் திரும்ப முற்படுகையில் எச்சரிப்பவனாகவும் இருக்கும் எனது பிரசன்னத்தை இப்பிறவியில் உனக்குக் கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பமாகக் கருதி முறையாகப் பயன்படுத்திக்கொள்வாயாக. அன்றலர்ந்த தாமரையின் அருகிலிருந்தும் வேறொன்றை நாடி தூரப்பாயும் தவளையைப் போலல்லாது காத தூரத்திலிருந்து வந்து வயிறாரத் தேனருந்தி மகிழும் தேனீயைப் போன்று இருப்பாயாக.

**16.** பரமாத்மாவே எல்லாஉயிர்களிடத்தும் உறைந்துள்ள அன்பின் சொருபமாதலால் அதை எமது உயிர்நாடியாகப் போற்ற வேண்டும். அன்பு மயமான பிற வடிவங்களைவிட ஆண்டவன்மீது நிலை நிறுத்தும் அன்பே பக்தியெனப்படும். பக்தியை அடையும் வழியுமிதுவே. கோபத்தை அன்பினாலும், பந்தங்களை ஆராய்ந்துபார்த்தும், கபடத்தன்மையை சத்தியத்தின் மூலமாகவும் சுலபமாக வெற்றி கொள்ளலாம். ஆத்மா பராமானந்தத்துள் திளைக்க வேண்டுமெனில் புலன் வழி இன்பங்களை நாடலாகது.

**17.** மனமாகிய உனது குழந்தையை சாத்வீக குணவியல்புகளுடன் வளர்த்துவந்தால் புத்தி கூர்மையடைந்து உலகில் காணும் பொருட்கள்யாவும் மாயத்தோற்றமே என்பதையுணர்ந்து கொள்ளும். தன்னிடமுள்ள குறைபாடுகளையும் பயத்தையும் பொருட்படுத்தாது தனது குறிக்கோளை அடைவதில் சிரத்தையுடன் இருக்கும். இதற்கான பயிற்சியை பலத்தைப் பிரயோகிக்காது பொறுமையுடன் அன்பான அரவணைப்பினால் வழங்கவேண்டும். பிரபஞ்சத்தில் காணப்படும் அனைத்தும் மாயையென விளங்கி அழிவற்ற பரப்பிரம்மனை உணரும் ஆர்வத்தை வலுவடையச் செய்ய வேண்டும்.

**18.** மனமானது தீயவற்றை நாடும்போது அதன்வழியே செல்லாது ஆண்டவனின் நாமத்தை ஜெபிப்பவர்களோ வேறு நற்செயல்களில் ஈடுபடுபவர்களோ நிச்சயம் கடவுளின் அருளைப்பெற தகுதி வாய்ந்தவர்களாகின்றனர். ஒரு பக்தனால் மாத்திரம் இறைவனை உணர்ந்துகொள்ள முடிவதைப்போல், கடவுள் ஒருவரால்தான் தன் பக்தனை அறிந்துகொள்ளமுடியும். மற்றவர்கள் இதை விளங்கிக் கொள்ளவும்முடியாது. அப்படியானவர்களுடன் ஆன்மீகம் சம்பந்தமாக கலந்துரையாடும்போது உங்களது பக்திநிலை குறைவடையும் வாய்ப்பு இருப்பதால் அது தவிர்க்கப்படவேண்டும். குருவையும் ஆண்டவனையும் பற்றிய ஐமிச்சங்களை அறவேநீக்கிவிடு. இறைபக்திக்கும் உலகியல் ஆசைகட்கும் தொடர்பேதுமில்லையாதலால் உனது வேண்டுதல் பூர்த்தியாகாதபோதும் ஜெபத்திலோ தியானத்திலோ முன்னேற்றம் காணாவிடத்தும் கடவுள்மீது வெறுப்புணர்வுகொள்வது இதுவரை உன்னால் பெறப்பட்ட பக்தியின் வளர்ச்சியையும் மனஅமைதியையும் சீர்குலைத்துவிடும். உலகியல் ஆசைகள் என்றோ ஒருநாள் கைவிடப்படவேண்டியவையே. ஆனால் பக்தியானது மேன்மேலும் வளர்க்கப்படவேண்டிய ஒன்று என்பதில் அசையாத நம்பிக்கை வைப்பாயாக.

**19.** நமது மனத்தினை ஒரு குழந்தைக்கு ஒப்பிடலாம். தாயனவள் அணைப்பதற்கு பின் தொடரும்போது அது மேன்மேலும் தத்தித்தத்தி ஓடுகின்றது. ஆனால் பின் தொடர்வதை தாய் நிறுத்தியதும் மேற்கொண்டு விலகிச் செல்லாது தாய் தன்னை அசட்டை செய்கின்றாளோ என்ற பயத்துடன் திரும்பித் தாயிடம் ஓடி வருகின்றது. தியானிக்கும்போதும், மனமானது நமது கட்டுப்பாட்டை மீறி அலையும்போது அதைப்பின்தொடர்வதை நிறுத்தினால் அது தானாகவே தனது இருப்பிடத்துக்கு மீண்டுவிடும். மனதின் ஊசலாட்டத்தைப் பொருட்படுத்தாது நாமஸ்மரணையையும், விரும்பிய ரூபத்தைத் தியானிப்பதையும், எமக்கு இசைவான விதத்தில் தொடர்ந்து சாதனை செய்தால் விரும்பிய குறிக்கோளை அடைவது நிச்சயம்.

**20.** நடக்கும் போது உனது நிழலானது முட்செடிகள் மீதும் குப்பை மேட்டின் மீதும் விழுவதைப்பொருட்படுத்தாது நீ தொடர்ந்து செல்வதுபோல் உன்னுள் சூட்சுமமாய் உறையும் அந்த ஆத்மா உனது வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளால் பாதிப்படைவதில்லை. அங்ஙனமே, பிரதிவிம்பமாக விளங்கும் உனது உடம்பைப்பற்றி நீ கவலைப்படுவது அர்த்தமற்றசெயலாகும்.

**21.** உனது அன்றாட சிறுசிறு செயல்கள்தான் பின்னர் பழக்கமாக உருப் பெற்று உனது நடத்தையையும் குணாதிசயங்களையும் நிர்ணயிக்கின்றன. எனவே, ஒவ்வொரு சிறிய செயலிலும் எச்சரிக்கையும் அவதானமும் தேவை. இவை உனது புர்த்திக்கூர்மை, புறநோக்கு, சிந்தனையாற்றல் என்பவற்றை விருத்தியடையச்செய்கின்றன. தீய சக்திகள் உன்னைச் சூழ்ந்துவிடாவண்ணம் எப்போதும் முன்னெச்சரிக்கையுடன் அவற்றை எதிர்கொள்வதற்கு அயராத உளப்பூர்வமான முயற்சியெடுத்தால் வாழ்கையில் வெற்றிபெறலாம்.

**22.** ஜபம், தியானம் இவற்றில் எதில் உனக்குக்கூடிய சிரத்தை ஏற்படுகின்றதோ அதைத் தொடர்ந்து சாதனை செய்யவும். ஜபம் என்பது நமது உதடு, நாக்கு என்பன அசையாதிருக்க மனதினால் செய்யப்படுவதாகும். இறைசிந்தனையுடன் அவனது நாமத்தை எழுதுவதோ, உச்சரிப்பதோ, அல்லது ஒரு விக்கிரகத்தை வணங்குவதன் மூலம் தொடர்ந்து இறைஉணர்வில் ஆழ்ந்திருக்கும் தியானமானது பல புனித தலங்கட்கு யாத்திரை மேற்கொண்டும், புனித தீர்த்தங்களில் நீராடியும், மகிமை வாய்ந்த கோபுரங்களைத் தரிசித்தும் கிடைக்கப்பெறும் புண்ணியத்துக்கு ஒப்பானதாகும்.

**23.** சூரியக் கதிர்களை கண்ணாடிவில்லை மூலம் ஒரு புள்ளியில் குவியச்

செய்யும்போது வெப்பம் உருவாகின்றது. ஆண்டவனின் அருட்கிரணங்களையும் எம்முள் செறியப்பண்ணும்போது அவை மனதை எரித்தழித்துப் புத்தியை பிரகாசமடையச் செய்கின்றன.

**24.** கரும்பில் அடியிலிருந்து நுனிவரை இனிப்புத்தன்மை பரவியிருப்பது போல் பிரம்மாவின் அங்கங்களிலிருந்து படைக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளிலும் பரமஸ்வரூபனின் பிரசன்னமும் அன்பும் ஏற்றத் தாழ்வின்றிப் பரந்து காணப்படுகின்றது. பிரேமையை வளர்த்துக் கொள்வதன் மூலம் மாத்திரம் அவனது பிரசன்னத்தை உணர்ந்துகொள்ளலாம்.

**25.** ஒவ்வொருவரினதும் ஆழ்மனதில் தெய்வீகம் உறைகின்றது. இடைவிடாத "ராம் ராம்" எனும் ஜெபத்துடன் உள்நோக்கி ஆழ்ந்து நோக்கும்போது தெய்வீகஊற்று பீறிட்டு வருவதை அகக்கண்களால் உணரமுடியும்.

**26.** தனது செயற்பாடுகளைத் தானே மீளாய்வு செய்து திருந்திக்கொள்ளும் சக்தி மனிதகுலத்திற்கு மாத்திரமுண்டு. சுய ஆத்மசோதனையின் மூலமாக பகவத்தத்துவத்தை சதா தியானித்து சாந்தியையும், பிரேமையையும் அடையலாம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளமுடியும்.

**27.** உனது நேரத்தை எதுவிதபலனும் எதிர்பாராது சேவையில் அர்ப்பணித்துவிடு. மானிடசேவையே தூய்மையானதாகும். ஆனால்,சர்வ வியாபியான இறைவன் ஒவ்வொருவரினுள்ளும் உறைகின்றார் என்ற உணர்வோடு சேவையாற்றாவிடில் அது பலனற்றதாகிவிடும். இடைவிடாத இறைசிந்தனையுடனும், தன்னார்வத்துடனும், எத்துறையில் சேவையாற்ற அழைக்கப்பட்டாலும் மனமுவந்து மேற்கொள்ளும் சேவையே ஆண்டவன் விரும்புவது. நொண்டிச்சாட்டுக்களை முன்வைக்காது,ஆண்டவனால் அளிக்கப்பட்ட அறிவு, ஆற்றல், சாமர்த்தியமெனும் அதீதசக்தியுடன் படைத்தவனின் புகழை விசுவாசத்துடன் பரவச்செய்வாய்.

**28.** முயற்சியுடன் செயல்புரிவது ஒவ்வொருவரினதும் கடமையாகும். இறைவன் உன்னைச்சுற்றியும், உன்னுள்ளும் வீற்றிருக்கின்றார் என்ற விழிப்புணர்வோடு கடமையில் ஈடுபடுவாயாக. வெற்றியும், தோல்வியும் அவரது கையிலே. அட்டமாசித்திகட்கும் ஆசைப்பட்டால் மேன்மேலும் துயரத்திலேயே முழ்குவாய். சம்சாரமெனும் இந்த அடர்ந்தகாட்டில் அவனது நாமத்தை இறுகப்பற்றுவதே சிறந்த வழி.

**29.** பிறர்மீது பழி சுமத்துவதும் கேலிபண்ணுவதும் தற்காலத்தில் மனிதனைப் பீடித்துள்ள மாபெரும் வியாதியாகும். இவை அவமதிப்புக்கும் அவநம்பிக்கைக்குமே வழிவகுக்கும். இறைசிந்தனையில் வாழ்வது பாதுகாப்பானதும் ஆனந்தமயமானதுமாதலால் அவ்வாறான பழிச்சொற்கள் எம்மை துயரத்தில் ஆழ்த்திவிட முடியாது.

**30.** பிறர் உனது குறையைச் சுட்டிக்காட்டும்போது அதை மறுதலிக்கவோ அல்லது தவறாகப் புரிந்துள்ளனர் என அவர்கள் மீது கோபத்தை வளர்த்துக் கொள்ளவோ வேண்டாம். அமைதியாக இருந்து உன்னையே மீள்பரிசோதனை செய்து நன்றியறிதலுடன் திருந்திக் கொள்வாயாக.

**31.** பிறர்மீது விரோதம்கொள்ளும் மனப்பாங்கானது நஞ்சுபோல் உடல்முழுவதும் பரவி நமது விற்றமின்களை உறுஞ்சுகின்றது. இன்பமோ துன்பமோ பரமாத்மாவிடம் அர்ப்பணித்துவிடுவதுதான் பெறுமதிமிக்க ஆத்ம திருப்தியை அடைவதற்கான இரகசியமாகும்.

**32.** நல்லதோ, தீயதோ, உனது ஒவ்வொரு செயலின் விளைவும் நிழல்போல் உன்னைப் பின்தொடர்ந்துகொண்டேயிருக்கும். போதுமென்ற உணர்வுடன் வாழ்வதே மிகப்பெரும் சந்தோஷமான நிலையாகும். பேராசை பெரும் நட்டத்தைத்தான் தரும்.

**33.** மற்றவர்மீது ஆயிரம் பிழைகளைப் பிடிப்பதிலும் பார்க்க உன்னில் இதுவரை வெளிப்படாத பிழைகளைக் கண்டறிந்து அதைக்கிள்ளியெறிந்து விடுவது மேலானதாகும். உன்னிடம் இல்லாத பிழைகளைப் பிறர் சுட்டிக்காட்டும்போது அதற்காக வருத்தப்படாதே. அவர்கள்மீது ஒருபோதும் பழிவாங்கும் எண்ணமும் கொள்ளவேண்டாம்.

**34.** தீய பழக்கங்களை இக்கணமே விட்டுவிடு. நாளைமுதல் எனப் பிற்போடாதே. உனது வசதிக்குத் தகுந்தவாறு ஏழைகளின் தேவையைத் திருப்திப்படுத்த முயற்சிப்பாயாக. உனது உணவில் ஒருபகுதியை அவர்களுடன் தினமும் ஒருதடவையாவது பகிர்ந்து கொள்வாயாக.

**35.** கடந்த காலத்தில் அறியாமையினால் செய்த தவறுகட்காக மனப்பூர்வமாக வருந்தி மீண்டும் அதைச்செய்யமாட்டேன் என உறுதிபூணவும். உனது உறுதியில் சிறிதும் வழுவாது சரியானபாதையில் செல்வதற்கான வலிமையைத் தந்தருளும்படி ஆண்டவனைப் பிரார்த்திக்கவும்.

**36.** கோபம், பேராசை, காமம், மோகம், பொறுமையின்மை, அகங்காரம், வெறுப்பு, பொறாமை என்னும் எட்டுவித பாவங்கள் கணமேனும் எம்மை அணுகவிடாது தூரவிலக்கி வைப்பது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். முதலாவதாக, மற்றவர்களின் சேமநலனில் பொறாமை கொள்வதையும் பிறர்க்குத்தீங்கு நினைப்பதையும் அறவே நீக்கிவிடு. பிறரின் மகிழ்ச்சியில் சந்தோஷப்படு. துயரத்தில் மூழ்கியிருப்பவர்களின் வளமான வாழ்க்கைக்காகப் பிரார்த்திப்பாயாக. இதுதான் ஆண்டவனின் கிருபையைப் பெறுவதற்கான சுலபமான வழியும் அவன்மீது அன்பை வளர்த்துக்கொள்வதன் குறிக்கோளுமாகும். இதற்கு பொறுமையெனும் பலம் நிறைந்திருக்க வேண்டும்.

**37.** எங்கு நோக்கினும் மனிதன் பாரிய பிரச்சனைகளில் மூழ்கி துயரத்துடன் காணப்படுகின்றான். அவன் மேன்மேலும் கவலைகளைப் பெருக்கிக் கொள்வது முறையாமோ? வேகமாக கொந்தளித்துக் கொண்டிருக்கும் கடல் மீது புயலும் வீசுவதை யாரும் விரும்புவார்களா? உனது இன்னல்களையும் இடைஞ்சல்களையும் பிறரிடம் புலம்பி அவர்களையும் துயரக்கடலில் மூழ்கடிக்காதே. பதிலாக, பிறரின் முகத்தில் புன்னகையைத் தவழச் செய்வாயாக. ஜபம், தியானம் என்பவற்றில் ஈடுபட்டு உனது இடர்களிலிருந்து மீண்டு மற்றவர்கட்கு முன்னுதாரணமாகத் திகழ்வாயாக.

**38.** உன்னை நல்வழிப்படுத்தியும் உனது முன்னேற்றத்தைத் தொடர்ந்து அவதானிப்பதுடன் சேமநலனில் அக்கறையுமுள்ள குருவை கனம் பண்ணவும். அதற்குமேலாக சகலகலாவல்லவன் என்றோ சர்வ சக்தி படைத்தவர் என்றோ எண்ணிவிடவேண்டாம். அத்தகுதி இறைவன் ஒருவருக்கு மாத்திரம் உண்டு.

**39.** ஒருவர் வார்த்தையில் மட்டுமல்லாது துறவுநிலையிலும் எவ்வளவு விசுவாசத்துடன் செயற்படுகின்றார் என்பதை தங்கத்தை உரைகல்லில் உரைத்துப் பார்ப்பதுபோல் உறுதிப்படுத்தியபின் அவரது அறிவுரைகளை செவிமடுத்து எமது வாழ்க்கையில் கடைப்பிடிப்பதுதான் தர்மம் ஆகும். இங்ஙனம் விசுவாசத்தைச் சோதிப்பதானது எமது பாண்டித்தியத்தை க்காட்டுவதாகக் கருதப்படலாகாது.

**40.** ஒரு சொல்லின் விளக்கத்தை அகராதியில் தேடும்போது வேறு சில சொற்கள் மீது எமது கவனம் சென்று அவற்றின் விளக்கத்தையும் புரிந்து கொள்கின்றோம். அதுபோல் குறிப்பிட்ட ஒரு பிரச்சனைக்கு நிவாரணம் தேடிவந்த நீ, அதைப்பெற்றுக்கொண்டது மட்டுமல்லாது உன்மனத்தில் புரையோடியிருந்த ஐயங்களையும் தெளிவுபடுத்தி மனக்கஷ்டங்களையும்

மறந்து மிகப்பெரும் ஆன்மீகஅமைதியை அடையலாம் என அனுபவத்தில் உணர்ந்துகொள்கின்றாய்.

**41.** உடலுக்கு இசைந்த அளவான உணவு, உறக்கம், எல்லோரையும் சமமாக நேசிக்கும்பாங்கு, வலியையும் ஏக்கத்தையும் தாங்கும் மனஉறுதி, வெற்றிதோல்வியில் சபலமடையாது சந்தோசமாக இருத்தல் ஆகிய குண இயல்புகளை வளர்த்துக்கொண்டால் அவை எமது நோய்களை மாற்றுவதில் மருந்துகளைவிட முக்கியபங்கு வகிக்கின்றன.

**42.** ஒருவரின் நோயை குணப்படுத்துவதற்கு வைத்தியர் அதற்குரிய மாத்திரையுடன் அதன் பக்கவிளைவுகளை ஈடுசெய்யக்கூடிய மருந்தையும் உணவில் சிலகட்டுப்பாடுகளையும் விதிப்பதுபோல் ஆண்டவனும் நாம் வேண்டும் வரத்தை அளிக்குமுன் சில கஸ்டங்களுக்குட்படுத்துகின்றார். இது நாம் அவரை இறுகப்பற்றுவதற்கு உதவிபுரிகின்றது.

**43.** உனது சொந்த அனுபவங்களே உன்னால் பெறப்பட்ட சத்தியமானவை யாகும். பிறரின் அனுபவங்களைப் பின்பற்றாதே. அவை எதுவும் உன்னால் அனுபவிக்கப்பட்டவற்றைவிட மேலானதாக இருக்கமுடியாது.

**44.** தன்நம்பிக்கை, உற்சாகம், விடாமுயற்சி என்பவற்றை வளர்த்துக்கொள். அவை உனது லௌகீக வாழ்க்கையிலும் ஆன்மீகத்துறையிலும் என்றும் உறுதுணையாயிருக்கும்.

**45.** ஒரு பொருளின் நன்மை தீயனவற்றை விவாதித்து ஆராயாமல் அதன் உண்மையான மதிப்பை அறிந்துகொள்ளவோ அல்லது அதைப் புறந்தள்ளிவிடவோ முடியாது. உனது மனம் தூய்மையாக இருப்பதால் உனது செயல்களும் தார்மீகமானவையாகத்தான் இருக்குமென நீ வாதாடலாம். ஆனால், ஒரு மூன்றாம்நபரின் பார்வையில் சிலபிழைகள் துல்லியமாகப் புலப்பட்டுவிடுகின்றன. அப்போது, உனது பகுப்பாய்வு முறையை மீண்டும் மீளாய்வு செய்யநேரிடலாம். ஆதலால் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் சாதகபாதகங்களை அலசிப்பார்த்து நல்ல முடிவை எடுப்பாயாக. நான் உட்பட பிறர் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளாதே.

**46.** ஒரு புனித தலத்தின் மகிமையானது யாத்திரிகர்கள் எவ்வளவு விசுவாசத்துடன் பிரார்த்திக்கின்றனர் என்பதையும் அவர்களின் பக்தியின் ஆழத்தையும் பொறுத்து வேறுபடுகின்றது.

**47.** தீய எண்ணம் கொண்ட ஒருசிலரை அடையாளம் காணமுடியாத காலத்தில்தான் கிருஷ்ணாவதாரம் தோன்றியது. தேள் வாலில் தன் நஞ்சை வைத்துள்ளது. பாம்பு அதை நச்சுப்பையில் வைத்துள்ளது. தற்கால மனிதனுக்கோ உடம்பு முழுவதும் குறிப்பாக கண்,நாக்கு,மனம், புத்தி, மூளை, நடை யாவற்றிலும் நஞ்சு பரவியுள்ளது. இவர்கட்கு அழிவு நிச்சயம் உண்டு என்பதை நம்புவாயாக. ஆதலால் காம, குரோத எனப்படும் ஆறு விஷப்பூச்சிகளால் சூழப்பட்டுள்ள உனது மனதினைத் தூய்மையாக்கி உன் இதயத்தாமரையை என்னிடம் அர்ப்பணிப்பாயாக.

**48.** விருப்பு, வெறுப்பு, தவறானஅபிப்பிராயம், காமம், பேராசை, கோபம்,பொறாமை என்பவற்றிலிருந்து விடுபட்ட தூய்மையான இதயமுடையவர்களால்தான் இந்த உலகத்தில் செல்வச்செழிப்பையும், அமைதியையும் உண்டாக்கமுடியும்.

**49.** கர்மா இல்லாத பக்தியை சுவரில்லாத அத்திவாரத்திற்கும், பக்தியில்லாத கர்மாவை அத்திவாரமில்லாத ஒரு சுவரிற்கும் ஒப்பிடலாம்.

**50.** காலையில் தூக்கத்தில் இருந்து விழிப்பதும், மாலையில் உறங்குவதும் பிறப்பையும், இறப்பையும் போன்றதே. கீழ்வரும் வேண்டுதலை ஆண்டவனிடம் சமர்ப்பித்து விழிப்பதும் உறங்குவதும் நன்மை பயக்கும்.

**காலையில்:** ஆண்டவனே நித்திரையின் கர்ப்பத்திலிருந்து நான் வெளிவந்துள்ளேன். இன்றைய எனது செயற்பாடுகள் யாவற்றையும் என் மனக்கண்முன் பிரசன்னமளிக்கும் பரமாத்மாவாகிய உனக்கு பிரசாதமாக அளித்துவிட திடசங்கல்பம் பூண்டுள்ளேன். எனது எண்ணம், சொல், செயல் ஒன்றுக்கொன்று முரண்படாது புனிதமானதாக அமையட்டும். எவரொருவரினதும் உணர்வுகளை புண்படுத்தாவண்ணம் என்னை நெறிப்படுத்தி நல்வழியை காட்டி அருள்வாயாக.

**மாலையில்:** இறைவா! காலையில் உன்மீது பாரப்படுத்தப்பட்ட இன்றைய பொழுதின் குறிக்கோள் யாவும் செவ்வனே நிறைவேறிவிட்டன. எனது எண்ணம், செயல், உரையாடல் யாவற்றிலும் உனது கிருபை நிறைந்திருந்தது. இவை அனைத்தையும் உனது பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். நான் மீண்டும் திரும்பிவரும்வரை ஏற்று அருள்புரிவாய்.

ஓம் ஸ்ரீ சத்யசாயி கிருஷ்ணாய நம.....
ஓம் சாந்தி.. சாந்தி... சாந்தி ....

சின்னத்தம்பி நாகராசா பெண் இராசேஸ்வரி


I am with you for ever
VMAS - 2431588